අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/05/02/01

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2022/12/12

சுற்றுநிருப இலக்கம்: 37/2022

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து பாடசாலை அதிபர்கள்,

**க.பொ.த (உயர் தர) பாடத் துறைகளில் கற்கும் மாணவர்களுக்காக சனாதிபதி நிதியத்தினூடான புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம்.**

க.பொ.த (உயர் தர) பாடத் துறைகளில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து வரும் கற்றலில் திறமைகளுடன் கூடிய மாணவர்களுக்கு சனாதிபதி நியத்தினூடாக புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டம் சகல கல்வி வலயங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இதன் கீழ் ஒரு வலயத்திற்கு 30 புலமைப் பரிசில்கள் ஒதுக்கப்படுகின்றது. இதற்காக தகுதி பெறும் புலமைப் பரிசில்தாரர்களுக்கு க.பொ.த (உயர் தர) வகுப்பில் நுழைந்து பரீட்சைக்குத் தோற்றும் வரையில் மாதாந்தம் ரூ. 5000/- வீதம் உயர்ந்த பட்சம் 24 மாதங்களுக்கு குறித்த புலமைப் பரிசில் நிதி வழங்கப்படும்.

**01. புலமைப் பரிசில் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கு அவசியான அடிப்படைத் தகைமைகள்**

1.1 2021(2022) இல் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றி, முதல் தடவை பெறுபேற்றின் படி க.பொ.த (உயர் தர) பாடத் துறையொன்றில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றிருத்தல்.

1.2 அரச பாடசாலையொன்றில் அல்லது அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலையொன்றில் கற்கும் மாணவர் ஒருவராக இருத்தல்.

1.3 பெற்றோரின் மாதாந்த வருமானம் ரூ. 75,000/- ஐ விடக் குறைவான குடும்பத்தைச் சேர்ந்தவராக இருத்தல்.

**02. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

2.1 பாடசாலை அதிபர்கள் இப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த சகல மாணவர்களையும் அறியப்படுத்த வேண்டும்.

2.2 இப் புலமைப் பரிசிலுக்குரிய விண்ணப்பப் படிவம் (இணைப்பு 01) மற்றும் அத்துடன் தொடர்பான ஆலோசனைகள் படிவத்தினை பாடசாலை அறிவித்தல் பலகையில்/ இணையத் தளத்தில் காட்சிப் படுத்தப்படுவதனை அதிபர் உறுதிசெய்தல் வேண்டும்.

2.3 மேற்படி அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள மற்றும் இப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்பும் மாணவர்கள் உரிய விண்ணப்பப் படிவத்தின் மாதிரிப் படிவத்திற்கமைவாக (இணைப்பு 01) தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் உரிய சான்றிதழ்களது பிரதிகளை தாம் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலையின் அதிபரிடம் மாத்திரம் உரிய தினத்திற்கு முன்னர் கையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் குடும்பத்தினது மாதாந்த வருமானம் தொடர்பாக கிராம சேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அறிக்கையையும் பூரணப்படுத்தி விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.4 விண்ணப்ப இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் உரிய விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சான்றிதழ்களின் பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறிய மாணவர்களது விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

## 03. தெரிவு செய்யும் செயன்முறை

### 3.1 பாடசாலை மட்டம்

3.1.1 பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களை பரீட்சித்துப் பார்த்து, இச் சுற்றுநிருபத்தின் 04. இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் புள்ளி வழங்கும் முறையை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைத் தெரிவுக் குழுவொன்றினூடாக அவ் விண்ணப்பப் படிவங்கள் அனைத்திற்கும் புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும். தெரிவுக் குழுவானது பாடசாலை அதிபர் அல்லது அதிபரால் நியமனம் செய்யப்படும் பிரதி/ உதவி அதிபர் ஒருவரது பங்குபற்றுகையுடன் பாடசாலையின் இரண்டு சிரேஷ்ட ஆசிரியர்கள் உள்ளடங்கும் விதமாக நியமனம் செய்யப்பட முடியும் என்பதுடன் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கைக்கமைவாக ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுக் குழுக்களை நியமனம் செய்து கொள்ள முடியும்.

3.1.2 புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் மாணவர்களது பெயர் பட்டியல் தயாரிக்கப்படுவது அவசியம் என்பதுடன் அப் பட்டியலுடன் விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் குறித்த மாணவர்கள் க.பொ.த (உயர் தர) பாடத் துறையொன்றில் கல்வி கற்கும் பாடசாலை உரித்தாகும் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### 3.2 வலய மட்டம்

3.2.1 வலய மட்டத்தில் இப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரால் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படல் வேண்டும். பாடசாலைகளிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களுக்கமைய 30 புலமைப் பரிசில்களுக்காக தெரிவுக் குழுவொன்றினூடாக புலமைப் பரிசில்தாரர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

3.2.2. இச் செயற்பாட்டிற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரும், இன்னுமொரு பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரும் பிரதேச செயலாளரால் பிரேரிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரும் உள்ளடங்கும் விதமாக வலய மட்டத்திலான தெரிவுக் குழுவொன்று அமைக்கப்படல் வேண்டும்.

3.2.3 கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படத்தக்க அளவு அதிகமாக காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுக் குழுக்கள் அமைக்கப்படலாம். தெரிவுக் குழுவினூடாக புலமைப் பரிசில்தாரர்கள் தெரிவுசெய்யப்படுவதற்குரியதாக இச் சுற்றுநிருபத்தின் 04. இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் புள்ளி வழங்கும் முறை அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும்.

3.2.4 புலமைப் பரிசில் பெற்றுக்கொள்வதற்காக பரிந்துரைக்கப்படும் மாணவர்களது விபரங்களை, <u>பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைப்படியாக</u> மாதிரிப் படிவ இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாணவர்களது பெயர் பட்டியலைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். அதற்கு மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட புலமைப் பரிசில்தாரர்களது வங்கிக் கணக்கு விபரங்களுடன் இத்துடன் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் 03 தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் ஏனைய விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்தவர்களது விபரங்கள் அடங்கிய வேறு பெயர் பட்டியலொன்றும் (பெற்றுக்கொண்ட புள்ளிகளின் வரிசைப்படி) தயாரிக்கப்படல் வேண்டும், குறித்த சகல ஆவணங்களும் வலயக் கல்விப் பணிப்பாளரால்

சான்றுப்படுத்தப்பட்டு அவற்றின் மென் பிரதிகள் மற்றும் வன் பிரதிகள் யாவும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களது விண்ணப்பப்படிவங்கள் மற்றும் சான்றிதழ்களது பிரதிகள் அனைத்தும் முறையாக கோவைப்படுத்தப்பட்டு வைத்திருத்தல் வேண்டும்.

**3.3 மாகாண மட்டம்**

3.3.1 மாகாண மட்டத்தில் இப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் நியமனம் செய்யப்படல் வேண்டும்.

3.3.2 வலய மட்டத்திலிருந்து கிடைக்கப்பெறும் ஆவணங்களுக்கமைவாக ஒரு வலயத்திற்கு 30 புலமைப் பரிசில்கள் என்றவாறாக மாகாண மட்டத்திற்கான ஆவணத்தை தயாரிக்க வேண்டும் என்பதுடன் ஒரு வலயத்திற்குரிய உயர்ந்த பட்ச புலமைப் பரிசில்தாரர்களின் எண்ணிக்கை மீறப்படாத வகையில் செயற்படல் வேண்டும்.

3.3.3 மாகாண மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல் (மாதிரிப் படிவம் 02) மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் (மாதிரிப் படிவம் 03) ஆகியன மாகாணக் கல்விப் பணிப்பாளரால் பரிந்துரை செய்யப்பட்டு, கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளருக்கு (பாடசாலை செயற்பாடுகள்) அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த ஆவணத்தின் மென் பிரதியினை directorschoolactivities@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன் அதன் மென் பிரதியினை pfschol@presidentsoffice.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**3.4 தேசிய மட்டம்**

3.4.1 ஒவ்வொரு வருடமும் விண்ணப்பப்படிவங்களைக் கோருவதற்குரிய ஆலோசனைக் கடிதம் கல்வி அமைச்சினூடாக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.4.2 மாகாண மட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டு கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்படும் உத்தேச புலமைப் பரிசில்தாரர்களுக்கு இப் புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்படும்.

## 04. <u>விதிமுறைகள் மற்றும் புள்ளிகள் வழங்கப்படும் விதம்</u>

ஒரு விண்ணப்பதாரருக்கு அதிக பட்சம் 100 புள்ளிகள் வழங்கப்படலாம்.

### 4.1 <u>குடும்பம் தொடர்பான விபரங்கள்</u>

4.1.1 குடும்பத்தில் 21 வயதிற்கு கீழுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை
இரண்டு அல்லது அதற்கு மேல் எனின் - 04 புள்ளிகள்
4.1.2 பெற்றோர் இருவரையும் இழந்திருப்பின் - 06 புள்ளிகள்
4.1.3 பெற்றோரில் ஒருவரை இழந்திருப்பின் - 03 புள்ளிகள்
4.1.4 பெற்றோர் அல்லாத பாதுகாவலர் ஒருவரிடம் இருப்பின் - 02 புள்ளிகள்
4.1.5 மாணவருக்கு முழுமையான உடலியல் பலவீனங்கள் காணப்படின் - 10 புள்ளிகள்
(பகுதியளவில் உடலியல் பலவீனமுற்றவர் எனின் 05 புள்ளிகளை மாத்திரம் வழங்குக)
(உயர்ந்த பட்சம் 25 புள்ளிகள்)

கருத்தில் கொள்க: 21 வயதிற்கு கீழ் திருமணம் செய்யாது பெற்றோரில் தங்கி வாழும் பிள்ளைகளே இங்கு பிள்ளைகளாக கருதப்படுவர். உடலியல் பலவீனங்கள் தொடர்பாக அரச வைத்திய அதிகாரி ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

### 4.2 க.பொ.த (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறு

4.2.1 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையின் கட்டாய பாடங்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| மிகச் சிறந்த சித்தி | (A) | - | 08 புள்ளிகள் |
| விசேட திறமைச் சித்தி | (B) | - | 06 புள்ளிகள் |
| திறமைச் சித்திக்காக | (C) | - | 04 புள்ளிகள் |
| சாதாரண சித்திக்காக | (S) | - | 02 புள்ளிகள் |

4.2.2 2006.03.07ம் திகதியுடைய கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 2006/09 இல் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுப் பாடங்களுக்காக, சித்தியடையந்த ஒரு தெரிவுப் பாடத்திற்கு 01 புள்ளி வீதம், உயர்ந்த பட்சம் 02 தெரிவுப் பாடங்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட முடியும்.

(உயர்ந்த பட்சம் 50 புள்ளிகள்)

### 4.3 விளையாட்டு

கரப் பந்து/ வலைப் பந்து/ கால் பந்து/ கூடைப் பந்து/ கிரிக்கெட்/ எல்லே/ பட்மிண்டன்/ கபடி/ றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுனர் விளையாட்டுக்கள்/ செஸ்/ கேரம்/ டெனிஸ்/ நீச்சல்/ ஜிம்நாஸ்டிக்/ கராத்தே/ மேசைப் பந்து போன்றன

| | தேசிய மட்டம் | மாகாண மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|
| ▪ விளையாட்டுப் போட்டிகளில் முதலாமிடம்- | 09 | 07 | 05 |
| ▪ விளையாட்டுப் போட்டிகளில் இரண்டாமிடம்- | 08 | 05 | 04 |
| ▪ விளையாட்டுப் போட்டிகளில் மூன்றாமிடம்- | 06 | 03 | 02 |
| ▪ தலைமைத்துவம் - | 01 | 01 | 01 |

(உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள்)

### 4.4 அழகியல் மற்றும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகள்

- மாணவர் படையணி
  சாரணர்/ பெண் சாரணியர்
  முதலுதவி/ சுற்றாடல் முன்னோடி/ வேறு

- தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டிகள்
  விவாதம்/ பேச்சு/ அறிவித்தல்/ பொது அறிவு
  சித்திரம்/ நடனம்/ சங்கீதம்/ பாடல்/ மேடை நாடகம்
  பாடங்களில் சிறந்த சாதனைகள்

| | | தேசிய மட்டம் | மாகாண மட்டம் | வலய மட்டம் |
|---|---|---|---|---|
| ▪ முதலாமிடம் | - | 09 | 07 | 05 |
| ▪ இரண்டாமிடம் | - | 08 | 05 | 04 |
| ▪ மூன்றாமிடம் | - | 06 | 03 | 02 |
| ▪ தலைமைத்துவம் | - | 01 | 01 | 01 |

(உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள்)

### 4.5 மாணவர் தலைமைத்துவம்

| | | |
|---|---|---|
| ▪ பாடசாலையின் பிரதான மாணவர் தலைவர் | - | 05 |
| ▪ பாடசாலையின் பிரதிப் பிரதான மாணவர் தலைவர் | - | 04 |
| ▪ மாணவர் தலைவர் (சிரேஷ்ட/ கனிஷ்ட) | - | 03 |
| ▪ வகுப்புப் பிரிவிற்கான மாணவர் தலைவர் | - | 02 |
| ▪ வகுப்பறைத் தலைவர் | - | 01 |

(உயர்ந்த பட்சம் 05 புள்ளிகள்)

கருத்தில் கொள்க :-

- மேலே 4.3 மற்றும் 4.4 இல், ஒரு மாணவருக்கு ஒரு இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக தேசிய, மாகாண மற்றும் வலயம் ஆகிய மட்டங்களைக் கருத்தில் கொண்டு புள்ளிகள் வழங்கப்படலாகாது. புள்ளிகள் வழங்கும் போது உயர்ந்த மட்ட புள்ளிகளை மாத்திரமே கருத்தில் கொள்ள வேண்டும்.

- மேலே 4.5 இல் புள்ளிகளை வழங்கும் போது உயர்ந்த மட்ட புள்ளிகளை மாத்திரமே கருத்தில் கொள்ள வேண்டும்.

## 05. புலமைப் பரிசில் வழங்குதல்.

5.1 இரண்டாம் நிலைக் கல்விக்குரிய தரம் 12 இல் சேர்த்துக் கொள்ளப்பட்ட க.பொ.த (உயர் தர) கல்வியை ஆரம்பிக்கும் மாணவர்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு க.பொ.த (உயர் தரத்தில்) கற்கும் 02 வருட காலப் பகுதியிலும் ஒரு மாதத்திற்கு ரூ. 5000/- வீதம் 24 தவணைகளாக புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். உரிய புலமைப் பரிசில் நிதித் தொகையானது மாணவரின் பெயரின் ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்கொன்றில் நேரடியாக வைப்பிலிடப்படும்.

4.6 உரிய புலமைப் பரிசில்தாரர் ஏதேனுமொரு காரணத்திற்காக தாம் கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து இடைவிலகி வேறு பாடசாலையொன்றில் சேர்ந்திருப்பின், அது குறித்து உறுதிப்படுத்தல் கடிதமொன்றை அதிபரால் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் பிரதியுடன் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

## 06. புலமைப் பரிசில் கண்காணிப்பு

6.1 வலய மட்டத்தில் புலமைப் பரிசில்களை கண்காணிக்கும் செயற்பாடுகள் குறித்த மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைக்கு உரித்தான வலயக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்காக ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கு பொறுப்புக்களைக் கையளிக்கலாம்.

6.2 மாகாண மட்டத்தில் புலமைப் பரிசில்தாரர்களை கண்காணித்தலுக்குரிய செயற்பாடுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக உரிய பொறுப்புக்களை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஒருவரின் கையளித்தல் வேண்டும்.

6.3 தேசிய மட்டத்திலான புலமைப் பரிசில்தாரர்களைக் கண்காணிக்கும் செயற்பாடுகள் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாடுகள் கிளையினூடாக மேற்கொள்ளப்படும்.

## 07. புலமைப் பரிசில் இரத்துச் செய்யப்படக் கூடிய சந்தர்ப்பங்கள்

7.1 கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் காரணங்கள் தொடர்பாக கருத்தில் கொண்டு சுற்றுநிருபத்திற்கமைவாக இப் புலமைப் பரிசில்தாரருக்கு வழங்கப்படும் புலமைப் பரிசிலை இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் கல்விச் செயலாளரைச் சாரும்.

I. புலமைப் பரிசில்தாரர் ஒழுக்க விரோத நடத்தையொன்றின் விளைவாக தண்டனைக்கு உள்ளாதல்.

II. தொடர்ச்சியாக பாடசாலைக்கு சமூகமளிக்காதிருத்தல்.

III. தொடர்ச்சியான கல்விச் செயற்பாடுகளிலிருந்து விலகுதல்.

IV. க.பொ.த (உயர் தர) கல்வியை பூரணப்படுத்தாமல் பாடசாலையிலிருந்து இடைவிலகுதல்.

## 08. கால வரையறை

| செயற்பாடு | காலம் |
|---|---|
| 8.1 விண்ணப்பப் படிவங்களை கோருதல் | - க.பொ.த (சாதாரண தர) பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு மாத காலத்தினுள் இவ் வருடத்தில் 2022/12/23ம் திகதி |
| 8.2 அதிபரால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்புதல். | - விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டு 02 வாரங்களுக்குள் இவ் வருடத்தில் 2023/01/07ம் திகதி |
| 8.3 வலயக் கல்விப் பணிப்பாளரால் உரிய ஆவணங்களை மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்புதல். | - பாடசாலைகளிலிருந்து விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பெற்று 03 வாரங்களுக்குள் இவ் வருடத்தில் 2023/01/27 திகதி |
| 8.4 மாகாணக் கல்விப் பணிப்பாளரால் உரிய ஆவணங்களைக் கல்வி அமைச்சிற்கு அனுப்புதல். | - வலய மட்ட பட்டியல்கள் கிடைக்கப்பெற்று 01 வாரத்தினுள் இவ் வருடத்தில் 2023/02/03ம் திகதி |
| 8.5 கல்வி அமைச்சினால் சனாதிபதி செயலகத்திற்கு அனுப்புதல். | - மாகாண மட்ட பட்டியல்கள் கிடைக்கப்பெற்று 01 வாரத்தினுள் நிறைவடைய முன்னர். இவ் வருடத்தில் 2023/03/15ம் திகதி |

இச் சுற்றுநிருபத்தில் ஏதேனுமொரு முரண்பாடு காணப்படின் அது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

எம்.என் ரணசிங்ஹ
செயலாளர்
கல்வி அமைச்சு

**<u>மாதிரி விண்ணப்பப் படிவம்</u>** அலுவலக உபயோகத்திற்காக

| |
|---|
| |

**<u>2021 (2022) வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த (சா.த) பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்து 2024ம் ஆண்டில் க.பொ.த (உ.த) கற்கும் மாணவர்களுக்காக சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசில்</u>**

(விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்த முன்னர் ஆலோசனைப் படிவத்தைப் பார்க்கவும்)

க.கொ:- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி தான் க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குரிய கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்ட பாடசாலை அதிபரிடம் மாத்திரம், ...................................... திகதி அல்லது அதற்கு முன்னர் கையளிக்க வேண்டும். புள்ளிகள் இடப்படவேண்டிய இடங்கள் விண்ணப்பதாரரால் நிரப்பப்படலாகாது.

மாகாணம் :-.......................................

மாவட்டம் :-..................................

கல்வி வலயம் :-........................

**பகுதி I**

01. விண்ணப்பதாரரின் தனிப்பட்ட விபரங்கள்

முதலெழுத்துக்களுடன் பெயர் :-.........................................

முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :-.........................................

க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றிய
- மொழி மூலம் :-.........................................
- பரீட்சை இலக்கம் :-.........................................

தோற்றிய முதல் சந்தர்ப்பத்திலேயே க.பொ.த (சா.த) பரீட்சையில் சித்தியடைந்து உயர் தரம் கற்பதற்கு தகுதி பெற்றுள்ளாரா என்பது தொடர்பாக :-.........................................

க.பொ.த (சா.த) பரீட்சையின் போது கல்வி கற்ற பாடசாலை :-.........................................

க.பொ.த (உ.த) கற்கும் பாடசாலை :-.........................................

பிறந்த திகதி :-.........................................

தனிப்பட்ட முகவரி :-.......................................................
.......................................................................

தொலைபேசி இலக்கம் (நிலையான) :-.........................................
(கையடக்க) :-.........................................

தாங்கள் தரம் 5 புலமைப் பரிசில் பெறுபவரா? :-.........................................

---

பகுதி II

**01. <u>குடும்பம் தொடர்பான விபரங்கள்</u>**

| | விடயம் | | புள்ளிகள் |
|---|---|---|---|
| 01.01 | குடும்பத்திலுள்ள பெற்றோரிடம் தங்கி வாழும் 21 வயதிற்கு குறைந்த சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை. | (............) | |
| 01.02 | • தங்களது பெற்றோர் இருவரும் உயிருடன் உள்ளனரா? | ஆம்/ இல்லை | |
| | • பெற்றோர் அல்லாத பாதுகாவலருடன் வாழுகின்றீர்களா? (அவ்வாறிருப்பின் சட்ட ரீதியான பாதுகாவலர் என உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.) | ஆம்/ இல்லை | |
| 01.03 | தங்களது தாய் அல்லது தந்தை மாத்திரம் உயிருடன் உள்ளாரா? | ........................ மாத்திரம் உள்ளார் | |
| 01.04 | உங்களுக்கு ஏதேனுமொரு உடலியல் பலவீனங்கள் காணப்படுகின்றனவா? | ஆம்/ இல்லை | |

அவ்வாறிருப்பின் அப் பலவீனம் எத்தகையது?.......................................................................................

| |
|---|
| |
| (பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகை (உயர்ந்த பட்சம் 25 புள்ளிகள்) |

**02.** கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தர) பரீட்சை பெறுபேறுகள்

| | பாடம் | | சித்தி | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 02.01 | சமயம் | :- | ................ | |
| 02.02 | மொழி மற்றும் இலக்கியம் | :- | ................ | |
| 02.03 | ஆங்கில மொழி | :- | ................ | |
| 02.04 | கணிதம் | :- | ................ | |
| 02.05 | வரலாறு | :- | ................ | |
| 02.06 | விஞ்ஞானம் | :- | ................ | |
| 02.07 | முதலாம் தெரிவுப் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம்...........................................) | :- | ................ | |
| 02.08 | இரண்டாம் தெரிவுப் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம்.............................................) | :- | ................ | |
| 02.09 | மூன்றாம் தெரிவுப் பாடத் தொகுதிக்குரிய பாடம் (பாடம்.............................................) | :- | ................ | |
| | பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகை | | | |

**03.** **<u>விளையாட்டு</u>**

உ+ம்: (கரப் பந்து/ வலைப் பந்து/ கால் பந்து/ கூடைப் பந்து/ கிரிக்கெட்/ எல்லே/ பெட்மிண்டன்/ கபடி, றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுனர் போட்டிகள்/ செஸ்/ கேரம்/ டெனிஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ மேசைப் பந்து போன்றன)

| விளையாட்டு | தேசிய மட்டம் | | மாகாண மட்டம் | | வலய மட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | |
| | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| | | | | | பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகை (உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள் ஆகும்) | |

**04.** **<u>அழகியல் அல்லது இணைப் பாடவிதான செயற்பாடுகள்</u>**

(உ+ம்: விவாதம்/ பேச்சு/ பொது அறிவு/ சங்கீதம்/ பாடல்/ சித்திரம்/ நடனம்/ சாரணர்/ மாணவர் படையணி/ முதலுதவி/ சுற்றாடல் முன்னோடி/ பாடத் திறமைச் சாதனைகள் அல்லது வேறு)

| செயற்பாடுகள் | தேசிய மட்டம் | | மாகாண மட்டம் | | வலய மட்டம் | |
|---|---|---|---|---|---|---|
| | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | | தலைமைத்துவம்/ பங்குபற்றுகை | |
| | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை | 1 ம் நிலை | 2 அல்லது 3ம் நிலை |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |
| | | | | | பெற்றுக் கொண்ட புள்ளிகளின் கூட்டுத் தொகை (உயர்ந்த பட்சம் 10 புள்ளிகள் ஆகும்.) | |

## 05. மாணவர் தலைமைத்துவம்

| | | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | பாடசாலையின் பிரதான மாணவர் தலைவர் | |
| 02 | பாடசாலையின் பிரதிப் பிரதான மாணவர் தலைவர். | |
| 03 | மாணவர் தலைவர் (கனிஷ்ட/ சிரேஷ்ட) | |
| 04 | வகுப்புப் பிரிவுத் தலைவர் | |
| 05 | வகுப்பறைத் தலைவர் | |
| | பெற்றுக் கொண்ட மொத்த புள்ளிகள் (உயர்ந்த பட்சம் 05 புள்ளிகள்) | |

## 06. <u>புள்ளிகளின் சாராம்சம்</u>

| | | |
|---|---|---|
| 01 | குடும்பம் தொடர்பான விபரங்கள் | |
| 02 | க.பொ.த (சா.த) பரீட்சை | |
| 03 | இணைப் பாடவிதானம் (விளையாட்டு) | |
| 04 | இணைப் பாடவிதானம் – (அழகியல் மற்றும் ஏனையவை) | |
| 05 | மாணவர் தலைவர் | |
| | பெற்றுக் கொண்ட மொத்த புள்ளிகள் | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். தேவையான சந்தர்ப்பங்களின் உரிய சான்றிதழ்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்க இணக்கம் தெரிவிக்கின்றேன்.

.........................

திகதி : 20.............................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**அதிபரின் சான்றுப்படுத்துகை :-**

மேலே 1-5 வரை குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் சரியான முறையில் வழங்கப்பட்டுள்ளன எனவும், ஏனைய தனிப்பட்ட விபரங்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

.....................................

திகதி : ..................

அதிபரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

---

**குடும்பத்தின் மாதாந்த வருமானம் தொடர்பான வெளிப்படுத்துகை :-**

(தாய்/ தந்தை/ பாதுகாவலரால் பூரணப்படுத்தப்படல் வேண்டும்)
நான் ............................................................................. தொழில் செய்கின்றேன்./ தொழில் செய்யவில்லை. எனது கணவர்/ மனைவி ............................................................................................... நிறுவனத்தில் தொழில் செய்கின்றார்./ தொழில் செய்யவில்லை. எமது குடும்பத்தின் மாதாந்த வருமானம் ரூ. ............................................................ ஆகும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

...........................................

தாய்/ தந்தை/ பாதுகாவலரின் கையொப்பம்

திகதி: ......................

பெயர்: .....................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் தொடர்பான விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

...................................

திகதி: .......................

கிராம உத்தியோகத்தரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை

மேலே வருமானம் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

...............................................

பிரதேச செயலாளரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

திகதி: ......................

---

**வலயக் கல்விப் பணிப்பாளர்,**

.................................................................... எனும் மாணவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பப் படிவத்தினை பரிந்துரை செய்து முன்னிலைப் படுத்துகின்றேன்.

..........................................................................

அதிபரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை

திகதி: ................................

**மாதிரிப் படிவம் 02**

<u>க.பொ.த (உயர் தரம்) கற்கும் மாணவர்களுக்காக சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப் பரிசிலுக்கு பரிந்துரைக்கப்படும் மாணவர்களது பெயர் பட்டியல்.</u>

2021(2022) வருடத்தில் நடாத்தப்பட்ட க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில்

**(மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் வரிசைப்படி இம் மாதிரிப் படிவத்தினை பூரணப்படுத்த வேண்டும்)**

மாகாணம் :

மாவட்டம் :

கல்வி வலயம் :

| தொடர் இலக்கம் | மாணவரின் பெயர் | பெண் / ஆண் | க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்கு விண்ணப்பித்த பாடசாலை | க.பொ.த (உயர் தரம்) கற்கும் பாடசாலை | தனிப்பட்ட முகவரி | பெற்றுக் கொண்ட புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| 01.<br>02.<br>03.<br>04.<br>.<br>.<br>.<br>30 | | | | | | |

தெரிவுக் குழு உறுப்பினரின் பெயர் பதவி உத்தியோகபூர்வ முகவரி

01.

02.

03

திகதி :

மேற்படி தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களது பட்டியலை பரிந்துரை செய்கின்றேன்.

திகதி:- ........................................ கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ பதவி முத்திரை :- ............................

(மாகாண/ வலயக் கல்விப் பணிப்பாளர்)

மாதிரிப் படிவம் 03

List of names recommended for scholarships to be awarded to GCE (A/L) students by the President's Fund
(Based on their performance at the GCE (O/L) Examination held in 2021(2022))

Province:
District:
Educational Zone:
Tel. No.:

| Serial No. | Name of the student | Name of the school | Mobile Number | NIC No. (if any) | Bank & Branch | Account Number | Bank Code | Branch Code |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01<br>02<br>03<br>04<br>.<br>.<br>:<br>30 | | | | | | | | |

..........................................

Signature
Provincial/ Zonal Education Director

Date :

The above information should be printed on **MS-Excel Sheet in Block capitals.** A soft copy, (pfschol@perseidentsoffice.lk) should be sent along with its original together with photo copies of the bank Account and National Identity card.

**மாதிரிப் படிவம் 03 ஐ பூரணப்படுத்தும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பாக கவனத்தில் கொள்க**

1. மாதிரிப் படிவம் 03, ஆங்கில மொழி மூலமாக பூரணப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
2. MS – Excel Sheet ஆவணமொன்றாக விபரங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
3. "Times New Roman" வகை எழுத்தில் 11 எழுத்தளவில் மேற்படி மாதிரிப் படிவம் 03 பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
4. புலமைப் பரிசில்தாரர்களது பெயர்கள் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படும் நிரலில் முதலெழுத்துக்களுடன் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், முதலெழுத்துக்களிடையே முற்றுப் புள்ளி வைக்காது ஒரு இடைவெளி (Space 1 ) மாத்திரம் வைக்கப்படல் வேண்டும்.
   உ+ம்: A B C Senanayake
5. சகல புலமைப் பரிசில்தாரர்களுக்குமான புலமைப் பரிசில் நிதியினை இலங்கை வங்கியில் புதிய கணக்கொன்றை ஆரம்பித்து வைப்பிலிடுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால் இலங்கை வங்கியில் ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்கு இலக்கம் ஒன்றினையே குறிப்பிட்டு அனுப்பிவைத்தல் வேண்டும்.